சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதிக்கு உட்பட்ட 5 வட்டங்களில் நேற்று (11.5.26) காலை, தெற்குப் பகுதிச் செயலாளர் திரு. டி. எஸ். பி. இராஜகோபால் எம். சி அவர்கள் தலைமையில், வடக்குப் பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் , 7வது மண்டலக் குழுத் தலைவர் திரு. பி.கே. மூர்த்தி MC, கிழக்குப் பகுதிச் செயலாளர் எம். டி. ஆர். நாகராஜ், ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் எல்.பி. எப். மோகன், அம்பத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சன் முனியாண்டி, தெற்குப் பகுதி தேர்தல் பொறுப்பாளர் திருமதி. குமரி விஜயகுமார் ஆகியோரின் முன்னிலையில், தி.மு.க.வேட்பாளர் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா வீதி வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் வட்டக் கழகச் செயலாளர்கள் த.பிரகாஷ் குமார், சி.சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி., நா. நெப்போலியன், இரா.டீக்கா, சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் திருமதி. நாகவள்ளி எம்.சி, திருமதி. உமா சந்தானம் எம்.சி, ஓட்டுனர் அணி மாவட்ட அமைப்பாளர் கு.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த தி.மு.க. அரசின் சிறப்பான

மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து நல்லாட்சியைத் தர வேண்டும்!

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அறிக்கை!

திருச்சி, மே.12

முந்தைய ஆட்சியில் நடை முறைப்படுத்தப்பட்ட சிறப் பான மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பாராட்டுக் களையும் பெறுகின்ற நல்லாட் சியைத் தரவேண்டும் என்பதே தமிழ்நாடு மக்களின் எதிர் பார்ப்பாகும் என்றும், தமிழ் நாடு முதலமைச்சராக ஜோசப் விஜய்க்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வாழ்த்துதேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரி யர் கே.எம். காதர் மொகிதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

'சிறந்த முறையில் மக்களுக் கான நலத்திட்டங்களையும், கல்வி, தொழில், பொரு ளாதா ரம், விவசாயம் என பல்வேறு துறைகளில் தமிழ்நாடு செழிப் புற ஆட்சி செய்த தி.மு.க அரசு தொடர வேண்டும்' என மக்க ளிடம் வாக்குகள் கேட்டு எங் கள் கட்சியின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் சட்ட மன்றத் திற்குத் தேர்வாகி யுள்ளனர்.

ஆனாலும், உங்கள் கட்சி ஆட்சி அமைத்திட தனிப் பெரும்பான்மையை மக்கள் வழங்கவில்லை என்ற போதி லும் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என் பதில் கவனம் செலுத்தி, மக்க ளாட்சி மாத்திரமே நமக்கான தாக இருக்க முடியும் என்பதால் புதிய அரசு அமைந் திட நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்கிறோம். இது தான் சாத்தியமாகும் என்ற நிலையில் மிக நீண்ட பரிசீல னைக்குப் பிறகு எங்கள் கட்சி யின் அவசர உயர்மட்டக் குழு கூட்டம் கூடி அரசு அமைக்க ஆதரவு தருவதாக முடிவு எடுத்து அறிவித்தோம்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் புதிய அரசு அமைப்பதில் தமிழ் நாடு ஆளுநர் மேலும் தாமதிக் காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண் டுகோள் விடுத்து அவரின் அர சியல் முதிர்ச்சியையும் மக்க ளாட்சியின் மேல் அவர் கொண்டிருக்கும் அக்கறையை யும் வெளிக்காட்டி இருந்தார்.

அதன் அடிப்படையிலேயே தி.மு.க கூட்டணியில் அங்கம் வைக்கும் இரண்டு கம்யூ னிஸ்ட் கட்சிகள், விசிக, இந் திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய நாங்கள் எவ்வித நிபந்த னையும் இன்றி புதிய அரசு அமைத்திட ஆதரவுக் கரம் நீட் டியுள்ளோம். ஆனாலும், நாங் கள் கொள்கை அடிப்படையில் தி.மு.க தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்ட ணியிலேயே தொடர்வதாக வும் அறிவித்திருக்கிறோம்.

அதன் பிறகே, ஆளுநர் அவர்கள் உங்களை அழைத்து நேற்றைய தினம் புதிய அரசை அமைத்திருக்கிறார். தமிழ்நாட் டின் முதலமைச்சராக பொறுப் பேற்று உங்களின் முதல் உரை யிலேயே ""தமிழ்நாடு அரசின் கஜானா முழுவதும் துடைக்கப் பட்டு இருப்பதாகவும், ரூபாய் 10 லட்சம் கோடி கடன் வைத் துள்ளதாகவும் குறிப் பிட்டு குறை கூறி தொடங்கி யிருப் பது ஆரோக்கியமற்றது.

எந்த அரசும் தேவைக்கேற்ற நிதியைப் பெற கடன் வாங்கா மல் இருப்பதில்லை; அந்த கட னும் துறை சார்ந்த உயர்நிலை அதிகாரிகளும் பொருளாதார வல்லுனர்களும் ஒருசேர கலந்து ஆய்வு செய்தே அரசு நிர்வாகத்தின் வரம்புக்கு உட் பட்ட நிலையில் முடிவுகள் எடுத்து கையாளப்படுவது வழக்கம்.

இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளீர்கள். தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் வருவாய் மற்றும் நிதிநிலை சார்ந்த பலதரப் பட்ட சரியான தகவல்களை சம்பந்தப்பட்ட துறை அதிகா ரிகளின் மூலம் மிகத் தெளிவா கத் தெரிந்து கொண்டு தான் உங்க ளின் வார்த்தைகள் வெளி வர வேண்டும் என எதிர் பார்க் கிறோம்.

உங்கள் தலைமையிலான புதிய ஆட்சியின் மக்கள் நலத் திட்டங்கள், பொரு ளாதார மேம்பாடு, கல்வி மற்றும் தொழில் வளர்ச்சி போன்ற பார்வையில் மாத்திரமே ஒரு முதலமைச்சரின் உரை அமைந் தால் அனைத்து தரப்பினரா லும் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

எனவே, எடுத்த எடுப்பி லேயே குறைகள் சொல்லி ஆட் சியைத் தொடங்காமல், மக் கள் எதிர்பார்த்திடும் நல்ல, ஆரோக்கியமான, எல்லோருக் குமான சிறந்த ஆட்சியாக அ மை ந் தி ட வே விரும்புகிறோம்.

எனவே, ஆரோக்கியமான அரசியலை முன்னிறுத்தி, சிறப் பான நிர்வாகத்தை நடத்தி, நாட்டு மக்களின் நலனை மாத் திரமே தாரக மந்திரமாகக் கொண்டு, மதக் காழ்ப்புணர்ச் சிகளுக்குக் கொஞ்சமும் இடம் தராமல் முந்தைய ஆட்சியில் நடை முறைப்படுத்தப்பட்ட சிறப்பான மக்கள் நலத் திட் டங் களை தொடரச் செய்து அனைத்து தரப்பினரின் வர வேற்பையும் பாராட்டுக் களை யும் பெறுகின்ற நல்லாட் சியைத் தரவேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தெரி வித்துள்ளார்.

2025 - 26 நிதியாண்டில்

மதுரை ரயில்வே கோட்டம் ரூ.1,408 கோடி வருமானம் ஈட்டி புதிய சாதனை!

மதுரை, மே 12 -

மதுரை ரயில்வே கோட் டத்தில் 2025-26ஆம் நிதி யாண்டில் மொத்த வருமா னம் ரூ.1,408 கோடியாக உயர்ந்திருப்பதாக தெற்கு ரயில்வே அறிவித்து உள் ளது.

2025-26ஆம் நிதியாண் டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு கிடை த் துள்ள இந்த அதிக வருமா னம் கடந்தாண்டை காட் டிலும் (ரூ.1,245 கோடியை விட) 13 சதவீதம் அதிகம் ஆகும்.

கடந்த நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட் டத்திற்கு மொத்தம் ரூ.1,408 கோடி வருமானம் கிடைத்துள்ள நிலையில், இதில் பயணிகள் பயணச் சீட்டு விற்பனை மூலம் மட்டும் ரூ.886.32 கோடி வருவாய் பதிவாகி இருக்கி றது.

அதே நேரம் சரக்கு போக்குவரத்து மூலம் ரூ.411 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. இது நி ர் ண யி க் க ப் ப ட் ட இலக்கை விட 10% அதிக மாகும்.

இதர வருமானங்கள் என்கிற வகையில் பயணச் சீட்டு பரிசோதனை மூலம் ரூ.12.73 கோடி வசூலாகி யுள்ளது.

97 சதவீத ரயில்களில் பயணச்சீட்டு பரிசோ தனை நடத்தப்பட்டு, பயணச்சீட்டு இல்லாதோர் மற்றும் ரயில்வே சட்ட விதிகளை மீறியவர்களிடம் அபராதமாக ரூ.12.73 கோடி வசூலிக்கப்பட்டுள் ளது .

உணவகச் சேவைகள் (Catering) மூலம் ரூ.7.92 கோடி வருவாய் கிடைத் துள்ளது, இது முந்தைய ஆண்டை விட 95.70% அதி கம் ஆகும். பார்சல் சேவை கள் மூலம் ரூ.10.78 கோடி வ ரு மா ன ம் கி டை த் துள்ளது.

பழைய இரும்பு பொருட்கள் (ஸ்கிராப்) விற்பனை மூலம் ரூ.27.38 கோடி வருவாய் ஈட்டப் பட்டுள்ளது.

இந்த வருவாயானது தெற்கு ரயில்வே நிர்வாகம் நிர்ணயித்த ரூ.1,340 கோடி என்ற இலக்கை விட 5% கூடுதல் என்பது குறிப் பிடத்தக்கது

13,056 சதுர கிலோ மீட்டர் வனப்பரப்பு ஆக்கிரமிப்பு!

காடுகளை அழிப்பதே இயற்கை பேரிடர்களுக்கு காரணம்!

புதுடெல்லி, மே 12 -

இந்தியாவில் 25 மாநி லங்களில் மொத்தம் 13,056 சதுர கிலோ மீட்டர் வனப் பகுதி ஆக்கிரமிப்பு செய் யப்பட்டுள்ளது. இது டெல்லி, சிக்கிம், கோவா ஆகியவற்றின் மொத்த நிலப்பரப்பை விட அதிகம் என்று சமீபத்தில் தேசிய பசுமை தீர்ப்பாயத்திடம் இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிக்கை அளித்துள்ளது. இதில் மத் திய பிரதேச மாநிலத்தில் அதிகபட்சமாக 5,461 சதுர கிலோ மீட்டர் வனப்பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட் டுள்ளது. அசாம் மாநிலம் 3,621 சதுர கிலோ மீட்டர் என்ற அளவில் இரண்டா மிடத்தில் உள்ளது.

கர்நாடகா, மகாராஷ் டிரா, அருணாசல பிரதே சம், ஒடிசா ஆகிய மாநிலங் களிலும் குறிப்பிட்ட அளவு வனப்பகுதிகள் ஆக்கிர மிப்பு செய்யப்பட்டுள் ளன. இதில் 409.77 சதுர கிலோமீட்டர் வனப்பரப்பு மட்டுமே ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும் இந்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் தெரி வித்துள்ளது. இது இயற்கை மேம்பாடு சார்ந்த வனஆர் வலர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. இதுகுறித்து வன உயிரின மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகி கள் கூறியதாவது: இந்தி யாவை பொறுத்தவரை கடந்த சில ஆண்டுகளாக வனப்பகுதி ஆக்கிரமிப்பு என்பது தொடரும் அவல மாக உள்ளது.

இதை வனப்பரப்பு ஆக் கிரமிப்பு என்று சொல் வதை விட, 'அரிய உயிரி னங்களின் வாழ்விட அழிப்பு' என்றே சொல்ல வேண்டும். இந்த வாழ்விட அழிப்பு என்பது வனங்க ளில் உள்ள உயிரினங்க ளுக்கு மிகப்பெரும் அச்சு றுத்தலாக உள்ளது. உலக ளவில் சராசரியாக 33.3 சத வீதம் வனப்பகுதி உள்ள நிலையில், இந்தியாவில் 21 சதவீதம் அளவுக்கே வனப் பகுதிகள் உள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா வில் 16 லட்சம் ஹெக்டே ருக்கு மேற்பட்ட மரங்கள் அ ழி க் கப் ப ட் டு ள் ள து என்று உலக இயற்கை வள அமைப்பின் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

தொடர்ந்து காடுகள் அழிக்கப்படுவதால் விலங் குகள், பறவைகள், பாசி கள், பூச்சிகள் என்று 10 லட் சத்திற்கும் மேற்பட்ட அரிய உயிரினங்கள் அழி வின் விளிம் பில் சிக்கி இருப்பதாக புள்ளி விபரங் கள் கூறு கிறது.

இந்த வனங்கள் தான் தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிர்களுக்கு வாழ்விடமாக திகழ்கிறது. வனங்களை ஆக்கிரமித்து அழிக்கும் போது பல்லுயிர் பெருக்கமும் கடுமையாக பாதிக்கப்படுகிறது. இது மட் டு மன்றி ஓரினச் சேர்க்கை மூலம் கார் பன் டை ஆக்சைடை உறிஞ்சி பூமியின் காலநி லையை ஒழுங்குப்படுத்து வதில் முக்கிய பங்கு வகிக் கிறது. இதற்கு பல்லு யிர்களும் துணைநிற்கிறது.

நீடித்த வளர்ச்சி என்ப தும் இயற்கை வளங்களை சிக்கனமான முறையில் திறம்பட பயன்படுத்துவ தையே உணர்த்துகிறது. தொழில்மயமாகி வரும் உலகில் இயற்கை வளங்க ளுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் இயற்கை வளங்களை நம்பியுள்ள ஏழை, எளிய மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். இயற்கை வளத்தை பாது காப்பது மிகவும் அவசியம் என்பது உலகளாவிய இலக் காக உள்ளது. இது நிறை வேற வேண்டும் என்றால் இந்த பூமியில் வாழும் பிற உயிர்களின் தேவையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இதற்கு வனப்ப ரப்பு ஆக்கிரமிப்பை முழு மையாக தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு நிர் வாகிகள் கூறினர்.

உலகில் வேறு எங்குமில்லை

உலகநாடுகளில் இல் லாத தனித்துவமான சில விலங்கினங்கள் இந்தியா வில் மட்டுமே உள்ளது. உலகின் பழைய குரங்கின மாக கருதப்படும் சிங்க வால்குரங்கு கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் காணப்படுகிறது. நீலகிரி வரையாடுகள் தமிழ்நாடு, கேரளாவில் உள்ளது. இது தென்னிந்தியாவின் தனித் துவ உயிரினமாக கருதப்ப டுகிறது. காஷ்மீர் கங்குல் எனப்படும் சிவப்பு மான் கள், உலகின் பழமையான உயிரினம் என்று கருதப்ப டும் கங்கைடால்பின், மணிப்பூரில் உள்ள சங்காய் எனப்படும் முன்மண் டைக்கொம்புடைய மான், இந்திய மூக்கு கொம்பன் எனப்படும் காண்டாமிரு கம், மேற்கு தொடர்ச்சி மலைகளில் காணப்படும் ராட்சத அணில் போன் றவை உலகில் வேறு எங் கும் இல்லை. இதை உணர்ந்தும் அரிய உயிரி னங்களை நாம் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசி யம் என்கின்றனர் வனஉயி ரின ஆர்வலர்கள்.

ஆலந்தூர் வடக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் விக்னேஷ் மகள் பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், 156வது வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மழலை செல்வத்தை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி மேற்கு பகுதி 4வது வட்ட கழக செயல்வீரர் திருவொற்றியூர் ஆதிபுரிஸ்வரர் சேவா அறக்கட்டளை செயலாளர் ஜி.மணிவண்ணன் இல்ல விழாவில் செல்வி. எம்.நீரஜபிரியா-வை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் கலந்துகொண்டு வாழ்த்தினார்.. இந்நிகழ்வில் ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் ஹ.ஜெகன், திரைப்பட நடிகர் கங்கையா பாலன், கே.வெங்கட், இராமநாதபுரம் கிராம துணை செயலாளர் கு.ரவி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

1 வாக்கு வித்தியாசத்தில் தோல்வி: முன்னாள் அமைச்சர்

கே.ஆர். பெரியகருப்பன் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு!

தேதி குறிப்பிடாமல் சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைப்பு!

சென்னை, மே 12 -

திருப்பத்தூர் தொகுதியில் 1 வாக்கு வித்தியா சத்தில் தோல்வி யடைந்த தி.மு.க. வேட்பாளர் பெரியகருப்பன் தாக்கல் செய்த வழக்கில், தீர்ப்பை தேதி குறிப்பி டாமல் சென்னை உயர் நீதி மன்ற ஒத்தீவைத்தது. தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலில், சிவகங்கை மாவட்டம், திருப்பத் தூர் தொகுதியில், தி.மு.க., சார் பில் போட்டியிட்ட பெரியகரு ப்பன் 83 ஆயிரத்து 364 வாக்குகளையும், த.வெ.க., வேட்பாளர் சீனிவாச சேதுபதி 83 ஆயிரத்து 365 வாக்குக ளையும் பெற்றிருந்தனர். த.வெ.க., வேட்பாளர் சீனிவாச சேதுபதி, ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தாக அறிவிக்கப்பட்டார். இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் பெரியகருப்பன் அவசர வழக்கு தொடர்ந்தார். அதில், "சிவ கங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு பதிவான தபால் வாக்கு, திருப்பத்தூர் மாவட்ட தொகுதிக்கு அனுப்பப்பட் டுவிட்டது.

அந்த வாக்கை மீட்டு, என்னு டைய தொகுதியின் கணக்கில் சேர்க்க வேண்டும். அதுவரை சீனிவாச சேதுபதி, சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க தடை விதிக்க வேண்டும்" என்று கூறியிருந்தார். இந்த வழக்கு, நீதிபதிகள் எல்.விக்டோரியா கவுரி, என்.செந் தில்குமார் ஆகி யோர் கொண்ட டிவிசன் பெஞ் சில் விடுமுறை நாளான நேற்று அவசர வழக்காக விசார ணைக்கு வந்தது. அப்போது, பெரியகருப்பன் தரப்பில் ஆஜ ரான மூத்த வக்கீல் முகுல் ரோத் தஹி, சிவகங்கை மாவட்ட திருப் பத்தூர் தொகுதி தபால் வாக்கு, திருப்பத்தூர் மாவட்ட திருப்பத் தூர் தொகுதிக்கு அனுப்பப்பட் டுள்ளது. அங்கு அந்த வாக்கை, அந்த தொகுதி தேர்தல் அதிகாரி நிராகரித்துள்ளார். அந்த வாக்கை சிவகங்கை மாவட்ட திருப்பத்தூர் தொகுதிக்கு அனுப் பியிருக்க வேண்டும். செல்லத் தக்க அந்த வாக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தால் இரு வேட்பாளர்களும் சமமான வாக் குகளை பெற்றிருப்பர்.

குலுக்கல் மூலம் வெற்றி வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டி ருப்பார்" என்று வாதிட்டார். உடனே நீதிபதிகள், "இதுபோன்ற சூழ்நிலைகளில் என்ன நடை முறை பின்பற்ற வேண்டும் என தேர்தல் ஆணையம் ஏதேனும் விதிகள் வகுத்துள்ளதா? எனக் கேள்வி எழுப்பினர். இதற்கு பதி லளித்த மூத்த வக்கீல், "இதுசம் பந்தமாக எந்த நடைமுறையும் இல்லை. இதுகுறித்து தேர்தல் ஆணையத்துக்கு பல புகார்கள் அளித்தும் எந்த பதிலும் இல்லை. தவறான முகவரிக்கு செல்லும் கடிதம் கண்டு பிடிக் கும்போது, சரியான முகவரிக்கு தானே அனுப்பி வைக்க வேண் டும். அது போல இந்த வாக்கை சரியான தொகுதிக்கு அனுப்ப உத்தர விடவேண்டும்" என் றார். த.வெ.க., வேட்பாளர் சீனி வாச சேதுபதி தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் அபிஷேக் மனு சிங்வி, "இந்த விவகாரம் தொடர் பாக பெரியகருப்பன் தேர்தல் வழக்குதான் தாக்கல் செய்ய முடியும்.

சட்டமன்ற நடவடிக்கைக ளில் பங்கேற்க தடை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்பதால், எந்த இடைக் கால உத்தரவும் பிறப் பிக்ககூடாது. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுவிட் டால், அவரை கடமையாற்ற அனு மதிக்க வேண்டும். சட்ட மன்ற நடவடிக்கைகளில் பங் கேற்க அவருக்கு தடை விதிக்க முடியாது. தடை விதித்தால், மக் கள் உரிமை பாதிக்கப்படும்" என் றார். தேர்தல் ஆணையம் தரப் பில் ஆஜரான வக்கீல் கே. தருண், "இந்த விவகாரத்தில் தேர்தல் வழக்குதான் தாக்கல் செய்ய முடியும். தபால் வாக்கு கள் இந்திய தபால் துறை மூலம் அனுப்பப்படுவதில்லை. தபால் வாக்குகளை பெற தேர்தல் ஆணையம், துணை தாசில்தா ரர் அந்தஸ்து அதிகாரியை நிய மிக்கும். அந்த அதிகாரி தபால் வாக்குகளை பெற்று, சம்பந்தப் பட்ட தொகுதி தேர்தல் அதிகாரி களுக்கு அனுப்பி வைப்பார். அர சியல் கட்சி பிரதிநிதிகளும் இதில் அமர்த்தப்படுவதால் எந்த தவ றும் நடக்காது. தபால் வாக்கு வேறு தொகுதிக்கு மாற்றி அனுப்பி விட்டால்.

என்ன செய்ய வேண்டும்? என சட்டத்தில் குறிப்பிடப்பட வில்லை. தேர்தல் வழக்கு தாக் கல் செய்யும் வரை தேர்தல் தொடர்பான ஆவணங்கள் பத்தி ரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும்" என்றார். அதற்கு நீதிபதிகள், "தபால் வாக்குகள் வேறு தொகு திக்கு அனுப்பியது குறித்து திமுக வேட்பாளரின் புகாருக்கு பதில ளிக்காதது ஏன்? ஒரு வாக்காக இருந்தாலும் பதிலளிக்க வேண் டிய கடமை தேர்தல் ஆணை யத்துக்கு உள்ளது. இதற் கான காரணங்களை விரிவாக விளக்கி இன்று தேர்தல் ஆணை யம் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கை இன்று மீண்டும் விசாரிப்போம்" என்று உத்தரவிட்டனர். அதன் படி, இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது திருப்பத்தூர் பெயர் கொண்ட வேறு தொகு திக்கு அனுப்பப்பட்ட ஒரு தபால் வாக்குச்சீட்டால், தேர்தல் முடிவு கள் மாறியுள்ளதாகவும், தபால் வாக்குச்சீட்டு தொகுதி மாறி அனுப்பினால் என்ன நடை முறை பின்பற்றப்படும் என்பது தெரியாத நிலை உள்ளதாகவும் பெரியகருப்பன் தரப்பில் வாதி டப்பட்டது. இறுதியில் இருதரப்பு வாதங்களை பதிவு செய்து கொண்ட விடுமுறைக்கால அமர்வு நீதிபதிகள் தி.மு.க. வேட் பாளர் பெரியகருப்பன் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

மே 12 (1994)

தி.மு.க. பொருளாளராக 1977ஆம் ஆண்டு முதல் பொறுப்பு வகித்தவர். அண்ணா, கலைஞர் அமைச்சரவைகளில் அமைச்சராகப் பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

"கழகத்தின் வெற்றியிலும் – தோல்வியிலும் – சோதனையிலும், சாதனையிலும் – கொடிய வெயிலிலும், நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் நமக்கு துணையாக இருந்த தங்கத்தூண் சாய்ந்து விட்டதே" என தலைவர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில், இவருக்கு கலைஞர் விருது வழங்கி சிறப்பித்தார் கலைஞர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.